அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 08/2026

எனது இலக்கம் : EST-6/04/LON/1040(ii)

பொது நிர்வாக, மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2026.02.27

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

## தாபனவிதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 11 ஆம் பிரிவைத் திருத்துதல் அரச உத்தியோகத்தர்களுக்குச் சலுகை வட்டி அடிப்படையில் வீடமைப்பு மற்றும் சொத்துக்கடன்களை வழங்குதல்.

2007.06.12 ஆந் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 15/2007 மற்றும் அதன் விளைவாந்தன்மையான சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தப்பட்ட தாபனவிதிக்கோவையின் அத்தியாயம் XXIV இன் உப பிரிவுகள் 11:4:1, 11:5:1 மற்றும் பின்னிணைப்பு 28 தொடர்பில் தங்களின் அவதானத்தைச் ஈர்க்கின்றேன்.

02. தாபனவிதிக்கோவையின் அத்தியாயம் XXIV இன் உப பிரிவு 11:4:1 மற்றும் உப பிரிவு 11:5:1 பின்வரும் பிரகாரம் திருத்தப்படுகின்றன.

11:4:1 உத்தியோகத்தரொருவருக்கு பெற்றுக்கொள்ளக்கூடிய அதிகபட்ச கடன் தொகை, உத்தியோகத்தரின் கொடுப்பனவுகள் தவிர்ந்த 07 வருட இணைந்த சம்பளம் அல்லது 50 இலட்சம் ரூபாய் ஆகிய இரண்டில் குறைவான பணமாகும்.

11:5:1 மேற்படி உப பிரிவு 11:4:1 இன் கீழ் பெற்றுக்கொள்ளப்படும் கடன் தொகைகளுக்காக, வங்கிகளினால் வீடமைப்பு மற்றும் சொத்துக்கடன்களுக்காக அறவிடப்படும் அதிகபட்ச வட்டி வீதமானது, ஒவ்வொரு வருடத்திற்கும் அதற்கு முந்தைய வருடத்தின் டிசம்பர் மாதத்திற்காக பிரகடனப்படுத்தப்பட்ட சராசரி பாரிய முன்னுரிமை கடன் வட்டி வீதத்துடன் (Average Weighted Prime Lending Rate - AWPLR) + 2% கூட்டுத்தொகை எனும் அதிகபட்ச நிர்வாகக் கட்டணத்திற்கு உட்பட்டு கணக்கிடப்படுவதுடன், அவ் வட்டி வீதமானது உரிய கடன் தொகை செலுத்தி முடிக்கப்படும் வரை மாற்றமின்றி நடைமுறையில் வலுவில் இருக்கும்.

அதன் பிரகாரம், பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் தொகைக்காகப் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வருடாந்த வட்டி அறவிடப்படும்.

| கடன் தொகை | வங்கிக்குச் செலுத்தப்பட வேண்டிய வட்டி வீதம் | அரசினால் செலுத்தப்பட வேண்டிய வட்டி வீதம் | உத்தியோகத்தர் செலுத்த வேண்டிய வட்டி வீதம் (சொத்துக்கடன் விண்ணப்பிக்கும் வருடத்திற்கு அமைவாக) |
|---|---|---|---|
| ரூ. 3,000,000/- வரை | AWPLR + 2% | 4% | (AWPLR + 2%) - 4% |
| ரூ. 3,000,000/- தாண்டி ரூ. 5,000,000/- வரை | AWPLR + 2% | 2% | (AWPLR + 2%) - 2% |

03. மேற்படி 02 ஆம் பந்தியின் கீழ் திருத்தப்பட்ட வட்டி வீதங்கள், இச்சுற்றறிக்கை ஏற்பாடுகள் நடைமுறைக்கு வரும் 2026.03.01 ஆம் திகதி அல்லது அதன் பின்னர் வழங்கப்படும் வீடமைப்பு மற்றும் சொத்துக்கடன்களுக்கு மாத்திரமே உரித்தாகும் என்பதுடன், 2026.03.01 ஆம் திகதிக்கு முன்னர் 2007.06.12 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 15/2007 மற்றும் அதன் விளைவாந்தன்மையான சுற்றறிக்கை ஏற்பாடுகளின் கீழ் அரச உத்தியோகத்தர்களினால் ஏற்கனவே பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள வீடமைப்பு மற்றும் சொத்துக்கடன்கள் தொடர்பில் இவ்வேற்பாடுகள் செல்லுபடியாகாது.

04. மேலும், தாபனவிதிக்கோவையின் அத்தியாயம் XXIV இன் உப பிரிவுகள் 11:11:6 மற்றும் 11:11:7 ஆகியவற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள வீடமைப்பு மற்றும் சொத்துக்கடன்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வங்கிகளின் பெயர் பட்டியலை உள்ளடக்கிய பின்னிணைப்பு 28 ஆனது (இணைப்பு 01) இன் பிரகாரம் திருத்தப்படல் வேண்டும்.

05. அரச உத்தியோகத்தர்களுக்காக வங்கிகள் மூலம் வீடமைப்பு மற்றும் சொத்துக்கடன்களை வழங்குவது தொடர்பான ஏனைய அனைத்து ஏற்பாடுகளும் மாற்றமின்றி அவ்வாறே நிலவும்.

06. இச்சுற்றறிக்கையானது பொதுத்திறைசேரியின் இணக்கப்பாட்டுடன் வெளியிடப்பட்டுள்ளது.

ஒப்பம்./ எஸ். ஆலோகபண்டார
செயலாளர்
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு

தொலைபேசி இலக்கம் : 011-2699399
தொலைநகல் இலக்கம் : 011-2692158
மின்னஞ்சல் முகவரி : ad-6-est@pubad.gov.lk

**<u>பின்னிணைப்பு 28</u>**
(XXIV -11:11:6, 11:11:7)

## கடன் பெற்றுக்கொள்ளக்கூடிய வங்கிகளின் பெயர்ப்பட்டியல்

1. மக்கள் வங்கி
2. இலங்கை வங்கி
3. தேசிய சேமிப்பு வங்கி